2019 ஜூலை 18]

135—

ஜவுளிப் பூங்கா

***12753—திரு. பெ. சுப்ரமணி:**

மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி தொகுதி, கடகத்தூர் அருகில் ஜவுளிப் பூங்கா அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ஓ.எஸ். மணியன், கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

தருமபுரி தொகுதி, கடகத்தூர் அருகில் ஜவுளிப் பூங்கா அமைக்க அரசு முன்வருமா என்று மாண்புமிகு தருமபுரி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் கோரியுள்ளார்கள்.

தருமபுரி தொகுதி, கடகத்தூர் அருகில் ஜவுளிப் பூங்கா அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் தற்சமயம் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ. சுப்ரமணி அவர்கள்.*

திரு. பெ. சுப்ரமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய கழகத் தலைவர் அவர்களை வணங்கி, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் என்னுடைய தொகுதியில் கடகத்தூர் பகுதியில் ஜவுளிப் பூங்கா அமைப்பதற்கு வாய்ப்பு இல்லை என்று தெரிவித்துள்ளார். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதனை மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.*

முற்பகல் 10–35

தருமபுரி மாவட்டத்தைப் பொறுத்தவரையில் அது வளர்ந்துவரும் மாவட்டமாக இருக்கிறது. என்னுடைய தருமபுரி தொகுதியில், சரவணா நூற்பாலை, குமரகிரி நூற்பாலை, P.M.P. *நூற்பாலை, ஜெய கௌரி நூற்பாலை போன்ற நூற்பாலைகளும்,* Garments *தொழில்களும் இருக்கின்றன. ஆதலால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுபரிசிலனை செய்து, அந்தத் தொகுதியில்*

ஒரு ஜவுளிப் பூங்கா அமைப்பதற்கு முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஓ.எஸ். மணியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மொத்தத்தில் தருமபுரி மாவட்டத்தில் 1,012 நெசவாளர் பெருமக்கள்தான் தொழில் செய்துவருகிறார்கள். 1,012 பேரில், கூட்டுறவு கைத்தறி நெசவாளர்கள், தனியார் கைத்தறி நெசவாளர்கள், விசைத்தறி நெசவாளர்கள் போன்ற எல்லோருமே அடங்குவார்கள். அங்கே துண்டுகள், கொசு வலைகள், பள்ளி மாணவர்களுக்கான விலையில்லா சீருடைகள் ஆகியவற்றைத் தயார் செய்கின்ற பணிகள்தான் நடக்கின்றன.*

ஓர் ஒருங்கிணைந்த ஜவுளிப் பூங்கா உருவாக்க வேண்டுமென்று சொன்னால், 25 ஏக்கர் நிலம் இருக்க வேண்டும். 50 தொழிற்கூடங்கள் ஒருங்கே அமைய வேண்டும். அதற்கு முதலீடாக ரூ.60 கோடியிலிருந்து ரூ.65 கோடி வரை திட்ட மதிப்பீடு தயாரிக்கப்படும். இதில், 40 சதவிகிதம் அல்லது ரூ.40 கோடியை மத்திய அரசு மானியமாக வழங்குகிறது. மாண்புமிகு அம்மாவின் அரசு 9 சதவிகிதம் அல்லது ரூ.9 கோடியை மானியமாக வழங்குகிறது. மீதமிருக்கின்ற 51 சதவிகிதத் தொகையை அங்கே யார் முதலீட்டாளர்களாக வருகின்றார்களோ, யார் பயனாளிகளாக, நுகர்வோர்களாக வருகின்றார்களோ அவர்கள்தான் அத்தொகையைக் கொண்டுவர வேண்டும் அல்லது வங்கிகள் மூலமாகப் பெறலாம். அதற்கான சாத்தியக்கூறுகள் இருக்குமென்று சொன்னால், அங்கே ஒருங்கிணைந்த ஜவுளிப் பூங்கா அமைப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்ய அரசு தாராளமாக முன்வரும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பல்வேறு இடங்களில் இது சாத்தியம் இல்லை என்கிற நிலை ஏற்பட்டிருக்கின்ற காரணத்தினால், 10 ஏக்கர் நிலத்துடன், 2½ கோடி ரூபாய் அரசு மானியத்துடன், 10 தொழிற்கூடங்கள் ஒருங்கே அமைக்கப்பெற்ற பகுதியில் சிறிய ஜவுளிப் பூங்கா அமைப்பதற்கான வழிவகைகளை மாண்புமிகு அம்மா அவர்கள் வகுத்துக் கொடுத்திருக்கின்றார்கள். திட்ட மதிப்பீட்டில் 50 சதவிகித

தொகையை மானியமாக வழங்குவதற்கு அரசு முன்வருகிறது. ஆனால், பல்வேறு மாவட்டங்களில் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் இந்தப் பூங்காக்களை அமைப்பது தொடர்பாக கூட்டங்கள் நடத்தியும், பயனற்றதாக இருக்கிறதே தவிர, இதற்கு முன்வருபவர்கள் மிகவும் குறைவாகவே இருக்கிறார்கள்.

தமிழகத்தில் 8 ஒருங்கிணைந்த ஜவுளிப் பூங்காக்கள் வெற்றிகரமாகவும், சிறப்பாகவும் நடைபெற்று வருகின்றன. திருப்பூரில் 2, நாமக்கல் மாவட்டத்தில் ஒன்று, மதுரை மாவட்டத்தில் ஒன்று, கரூர் மாவட்டத்தில் ஒன்று, கடலூர் மாவட்டத்தில் ஒன்று, காஞ்சிபுரம் மாவட்டத்தில் ஒன்று மற்றும் ஈரோடு மாவட்டத்தில் ஒன்று என 8 ஒருங்கிணைந்த ஜவுளிப் பூங்காக்கள் செயல்பட்டுவருகின்றன. ரூ.736.25 கோடி திட்ட மதிப்பீட்டில் இந்த 8 ஒருங்கிணைந்த ஜவுளிப் பூங்காக்களும் செயல்பட்டுவருகின்றன. இதில் 67,300 பேர் நேரடியாகவும், மறைமுகமாகவும் வேலை பெற்று பயனடைந்து வருகின்றார்கள். ஆக, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், நான் குறிப்பிட்டதைப்போல, அரசு குறிப்பிட்டிருக்கின்ற விதிகளின்படி முன்வருவீர்கள் என்று சொன்னால், மாவட்ட ஆட்சித் தலைவர்மூலம் கோரிக்கை வரப்பெற்றால், கண்டிப்பாக ஒருங்கிணைந்த ஜவுளிப் பூங்கா அமைப்பதற்கான ஏற்பாடுகளை அரசு செய்ய முன்வரும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ. சுப்ரமணி அவர்கள்.*

திரு. பெ. சுப்ரமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதைப்போன்று, எங்கள் பகுதியில் அரசு புறம்போக்கு நிலங்கள் நிறைய இருக்கின்றன. தற்போதுகூட தடங்கம் பகுதியில், தருமபுரியில் இருக்கின்ற அனைத்து நீதிமன்றங்களையும் கொண்டு வந்து ஒருங்கிணைந்த நீதிமன்றங்கள் அமைப்பதற்கான கட்டடங்களை மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள்தான் திறந்துவைத்தார்கள். அந்த வகையில், மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் குறிப்பிடுகின்ற 24 ஏக்கர் நிலம் மட்டுமல்லாமல், அதற்கும் கூடுதலாக நிலம் தேவைப்படுமானாலும், அதையும் கொடுப்பதற்கு நாங்கள் தயாராக இருக்கின்றோம்.

எங்களுடைய கழகத் தலைவர், முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோதுதான் தருமபுரியில் சிப்காட் பணிகள் எட்டு ஆண்டுகளுக்கு முன்பாகத் தொடங்கப்பட்டன. ஆனால், இதுநாள்வரை அந்த சிப்காட் பணிகள் தொடரவில்லை. படித்த மாணவர்கள் வேலை தேடி வெளியே செல்கின்ற சூழ்நிலை இருக்கின்ற காரணத்தினால், ஒரு ஐவுளிப் பூங்காவாவது அங்கு வர வேண்டுமென்ற எண்ணத்தில்தான் நான் இன்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்கிறேன்.

முற்பகல் 10—40

அந்த வகையிலே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் மாவட்டத்திற்கு அருகிலே உள்ள தொகுதி என்ற காரணத்தினால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்ய வேண்டும். தருமபுரி தொகுதியில் நெசவாளர் காலனி, பாரதிபுரம், அண்ணசாகரம், லலிகம் போன்ற பகுதிகளில் நெசவாளர்கள் நெசவுத் தொழிலை அதிகமாகச் செய்து வருகிறார்கள். அந்த வகையிலே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கேட்கின்ற இடத்தை நாங்கள் கண்டிப்பாகத் தருகிறோம். நிதி ஒதுக்கீடு செய்து, நீங்கள் அந்த 10 ஏக்கர் நிலத்தைக் கொடுத்தால், சிறிய ஐவுளிப் பூங்கா அமைப்பதற்கு வாய்ப்பு இருக்கும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அந்தவகையிலே, அந்த சிறிய ஐவுளிப் பூங்காவை அமைப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவாரா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ.எஸ். மணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்ட ஆட்சியர் அவர்களின் மூலமாக, கோரிக்கை உரிய வழிமுறைப்படி வரப்பெறின், கண்டிப்பாக ஐவுளிப் பூங்கா அமைத்துக் கொடுப்பதற்கு அரசு முன்வரும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர், என்ன சொல்லுங்கள்.

2019 ஜூலை 18]

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தருமபுரியில் உள்ள சிப்காட் பற்றி ஒரு கேள்வியை முன்வைத்தார். தருமபுரி சிப்காட்டில் 950 ஏக்கர்* Revenue Department Land identify *செய்திருக்கிறோம். நிச்சயமாக அந்த இடத்தைக் கையகப்படுத்தி,* first phase, second phase *என்று வரும். நிச்சயமாக முதற்கட்டமாக* Revenue Department land-*ஐக் கையகப்படுத்தி,* within three months *நாங்கள்* first phase *செய்வதாக இருக்கிறோம்.* Second phase–*க்கு நிலம் கையகப்படுத்தும் பணி நடந்திருக்கிறது.* 3(1) notification, 3(2) notification *கொடுத்திருக்கிறோம், அந்த* process delay *ஆகிறது. அதை நிறுத்திவிட்டு,* first phase *மட்டும் உடனடியாக, 950 ஏக்கர்* identify *செய்திருக்கிறோம். மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களும் தொடர்ந்து வலியுறுத்திக்கொண்டிருக்கிறார்கள். அந்த அடிப்படையில், உடனடியாக நிறைவேற்றித் தரப்படும். 950 ஏக்கர்* Revenue Department land-*ஐ கையகப்படுத்தி, அதை உடனடியாக நிறைவேற்றித் தருவதற்கு முயற்சி மேற்கொள்ளப்படும். மேற்கொண்டு தனியார் இடத்தைக் கையகப்படுத்தும் நடவடிக்கைகளை அரசு தொடர்ந்து செய்துகொண்டிருக்கிறது.* Special Officer *நியமனம் செய்திருக்கிறோம். வேலை கொஞ்சம் சுணக்கமாக இருக்கிறது. அந்தப் பணியையும் அரசு மேற்கொள்ளும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 136, மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. செங்குட்டுவன், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

136—

கால்நடை மருத்துவமனை

***4409—திரு. டி. செங்குட்டுவன்:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிருஷ்ணகிரி தொகுதி, கம்மம்பள்ளியில் கால்நடை மருத்துவமனை அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?